T-UN-663

தமிழ்ப் பல்கலைக் கழகச்
செய்தி மலர்

மலர் - 3 திருவள்ளுவராண்டு 2015 சித்திரை - 2 14-4-84. இதழ் - 1

தமிழ்ப் பல்கலைக் கழக முதற் பட்டமளிப்பு விழா

திருவள்ளுவர் ஆண்டு 2015 பங்குனித்திங்கள் 11-ஆம் நாளுக்கு நேரான 24-3-84 சனிக்கிழமை காலை 10-30 மணிக்கு தஞ்சாவூர் சங்கீத மகாலில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முதல்பட்டமளிப்புவிழா நிகழ்ந்தது.

தமிழ்ப் பல்கலைக் கழக வேந்தரும் தமிழக ஆளுநருமாகிய மேதகு எஃச். எல். குரானா அவர்கள் கொற்றங்கொண்டு அறிஞர் ஐவருக்கு "முதுமுனைவர்" என்னும் சிறப்பு நிலைப் பட்டத்தினை வழங்கிச் சிறப்பித்தார்கள். இணைவேந்தரும் கல்வி அமைச்சருமாகிய மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கள் பட்டமளிப்பு உரையாற்றினார்கள்.

இவ்விழாவில் "மாமன்னன் இராசராசன்படைப்பிலக்கிய உலகப்பரிசு" கவியோகி சுத்தானந்த பாரதியார் ஆக்கிய "பாரதசக்தி மகாகாவியத்" திற்கு வழங்கப்பட்டது.

அணிவகுப்பு

தஞ்சை வரலாற்றின் சிறப்பான இந்நாளில் தஞ்சை சரசுவதி மகால் கலைக்கூடத்திலிருந்து பட்டமளிப்புச் சீருடை அணிவகுப்பு 10-30 மணியில் துவங்கியது. இசைக்குழுவினர்வழிநடை மெட்டிசைக்க ஒப்பனைப்பந்தலின்வழி ஒடுங்கிய நடையில் அணிவகுப்பு நடையிட்டது. முன்னே தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சின்னம் பொறித்த ஆலவட்டம் ஒன்றும், அடுத்துப் புலி, வில், கயல் பொறித்த ஆலவட்டங்கள் இரண்டும் உயர்த்திப்பிடித்துவரப் பட்டன. பல்கலைக் கழகப் பதிவாளர் சீருடையணிந்து முன்னே வர, தொடர்ந்து சீருடை அணிந்த பேரவைக்குழு உறுப்பினர்கள், ஆளுநர் குழு உறுப்பினர்கள், புலத் தலைவர்கள் இருவர் இருவராக வந்தனர். மூன்று கொற்றக் குடைநிழலில் முறையே, மாண்புமிகு துணைவேந்தர், மாண்புமிகு இணைவேந்தர், மேதகு வேந்தர் வந்தனர்.

ஆலவட்டங்கள், அவற்றில் மூவேந்தரது சின்னங்கள், முக்கொற்றக் குடைகள், அவற்றின் நிழலில் மூவேந்தர்கள் அமைந்த அணிவகுப்புக் காட்சி பெருமிதத்தோடு தமிழர்தம் ஆட்சி மரபை நினைவுறுத்திற்று.

அணிவகுப்பு, பட்டமளிப்பு மண்டபத்தில் நுழைந்ததும் மன்றத்துப் பெருமக்கள் வரவேற்றுப் போற்றும் முகமாக எழுந்து நின்றனர். ஒப்பனை செய்யப்பெற்று அழகுற விளங்கிய மேடையில் அரியணை எனத் திகழ்ந்த அமளி நாற்காலிகளில் நடுவண் மேதகு வேந்தரும் இடப் பக்கத்தே மாண்புமிகு இணைவேந்தரும் வலப் பக்கத்தே மாண்புமிகுதுணைவேந்தரும் அமர, பட்டமளிப்புக் குழுவினரும், பட்டம் பெறும் சான்றோரும், பரிசு பெறும் கவியோகியாரும் பின்னணியாக அமர்ந்து விளங்கினர்.



மாண்புமிகு துணைவேந்தர் அவர்கள் தலைப் பாகை குடி விளங்கிய தோற்றப்பொலிவு தமிழ்ப் பண்பாட்டைக் காட்டியது.

பட்டமளிப்பு

தமிழ்த்தாய்வாழ்த்துடன் பட்டமளிப்பு நிகழ்ச்சி துவங்கியது. மேதகு வேந்தர் அவர்கள் "முதுமுனைவர் பட்டமளிப்பு விழா தொடங்குகிறது" என அறிவித்துச் சிறப்பு நிலைப் பட்டம் பெறுவோரை முன்னிலைப்படுத்துமாறு பணித்தார்கள். புலத்தலைவர்கள் ஐவர், முறையே உயர்திரு தண்டபாணி தேசிகர், உயர்திரு தி.சு. அவினாசிலிங்கனார், உயர்திரு கௌரி சங்கர தபதி, உயர்திரு திருவெண்காடு ப.சுப்பிரமணியம் பிள்ளை, அமரர் . சேவியர் தனிநாயக அடிகள் ஆகியோரது வாழ்வியற் குறிப்புகளையும் தகுதிப்பாடுகளையும் படித்து அவையில் முன்னிலைப்படுத்தினார்கள்.

மேதகு வேந்தர் அவர்கள்,

'தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வேந்தர் என்ற முறையில் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ்த் தாங்கள் எய்தியுள்ள தலைசிறந்த கல்விச் சிறப்பினையும் தமிழ் மொழிக்கும் தமிழ்க் கலைக்கும் பண்பாட்டிற்கும் தாங்கள் ஆற்றிய அருந் தொண்டினையும் பாராட்டும் வகையில் தங்களுக்கு இந்தச் சிறப்புநிலைப்பட்டம் அளிக்கப்பட்டு, இதற்கு அடையாளமாக இந்த முனைவர்நிலை ஆடையைத்தாங்கள் அணியத் தங்களுக்கு இசைவளிக்கிறேன்'

–என ஆங்கிலத்தில் மொழிந்து தமிழ்ப் பல்கலைக் கழக முத்திரை பொறிக்கப்பட்ட 'முதுமுனைவர்' சான்றிதழை ஒவ்வொருவர்க்கும் வழங்கிப் பெருமைப்படுத்தினார்கள்.

பட்டமளிப்பு உரை

பட்டமளிப்பு உரையாற்றுமாறு மேதகுவேந்தர் அவர்கள் வேண்டி அழைக்க இணைவேந்தர்மாண்புமிகு செ.அரங்கநாயகம் அவர்கள் பட்டமளிப்பு உரையினைப் படித்தார்கள்.

படைப்பிலக்கிய உலகப் பரிசு

தமிழ்ப் பல்கலைக் கழகம் திட்டமிட்டு அறிவித்திருந்த "மாமன்னன் இராசராசன் படைப்பிலக்கிய உலகப் பரி"சின் அமைவு, படைப்பிலக்கியத்தேர்வு ஆகியவற்றை மாண்புமிகு துணைவேந்தர் அவர்கள் அறிவித்துப் பரிசுக்குரிய கவியோகி சுத்தானந்த பாரதியாரை முன்னிலைப்படுத்தினார்கள். மேதகு இணைவேந்தர் அவர்கள் பாராட்டுச்சான்றிதழையும் பரிசுத்தொகை ஓர் இலட்சத்து ஓர் உருவாக்குரிய வங்கிக் காசோலையையும் வழங்கினார்கள்.

விழா நிறைவு.

மேதகு வேந்தர் அவர்கள்,
"இந்தச் சிறப்புநிலைப் பட்டமளிப்பு
விழா இத்துடன் முடிவடைகிறது"

என அறிவிக்க நாட்டுப்பண்ணுடன் விழா நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

மன்றத்துப் பெருமக்கள் வழியனுப்பிப்போற்றும் முகமாக எழுந்து நிற்க அணிவகுப்பு, முன்னர் அமைந்த பாங்கில் கலைக்கூடத்தை அடைந்து நிறைவெய்தியது.

பழைய கல்வெட்டு-கண்டுபிடிப்பு

தென்னார்க்காடு மாவட்டம் செஞ்சி வட்டம் பறையன்பட்டியிலுள்ள சுனைப்பாறை எனும் மலையில் பழைய கல்வெட்டொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கி.பி. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த இது சிறிது சிதைந்ததாக ஐந்து வரிகளில் உள்ளது. ஓரிரு மெய்யெழுத்துக்களே புள்ளி பெற்றுள்ளன. ஒரு சமணத் துறவி உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த இடத்தை இது சுட்டுகிறது. கண்டுபிடித்தோர்:

பாகூர் திரு குப்புசாமி
வில்லியனூார் திரு வேங்கடேசன்



"ந மோத்து பாணாட்டு வச்
சணந்தி ஆசாரிய
ர் (மா)ணாக்க ராராத (ன்)
நோற்று முடித்த (நி)
சீதிகை".

முதுமுனைவர் ஐவர்.

இலக்கிய முதுமுனைவர் ச. தண்டபாணி தேசிகர் தமிழும் வட மொழியும் வல்ல முதுபெரும் புலவர்.

சென்னைப் பல்கலைக் கழகத்து வித்துவான் தேர்வில் மாநில முதல் வராகத் தேறியவர். உயர்நிலைப் பள்ளியில் தொடங்கிய இவர்தம் தமிழ்ப்பணி மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் திகழ்கின்றது. ஆதீனப் புலவராக விளங்கிய இவர் எழுதியபன்னூல் களில் திருமந்திர எட்டு தந்திர உரையும், திரு வாசகப் பேருரையும் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை. திருக்குறள் உரைவளம் இவரது முத்திரைப்பதிப்பு.

அறிவியல் முதுமுனைவர் தி.சு. அவினாசிலிங்கம் செட்டியார் சட்டக்கலைப் பட்டம் பெற்றவர். தமிழ்நாட்டரசின்கல்வியமைச்சராக மூன்றாண்டுகள் பணியாற்றியபோது பாடங்களைத் தமிழில் பயிற்றுவிக்க வழிவகுத்ததோடு திருக்குறள் பாட நூல்களில் அமையச் செய்தவர்.

இந்தியமொழிகளில் முதன்முதலாகத் தமிழில் கலைக்களஞ்சியம் 10தொகுதிகள் வெளிவர மூலவராக அமைந்து நிறைவேற்றியவர். கோபிச் செட்டிப்பாளையத்தில் "இராமகிருட்டினர் சமயக் குழு அறிவாலயம்" தோற்றுவித்துப்பலவகைக் கல்வி நிலையங்களையும், கலை, தொழில் நிலையங்களையும் நிறுவி இயக்கி வருபவர்.

இலக்கிய முதுமுனைவர் சு.மு.கௌரிசங்கரதபதி சிற்பக்கலை வல்லுநர். சோதிடம் மனையடி நூல்

இசை, நாடகம் முதலிய அருங் கலைகளையும் கற்ற வல்லுநர். தென்மொழியும் வடமொழியும் கற்ற இவரது சிற்பங்கள் திருவரங்கம் முதல் கடல்கடந்த நாடுகளிலும் இவர்தம் பெயர் சொல்லி நிற்கின்றன.

இலக்கிய முதுமுனைவர் திருவெண்காடு ப.சுப்பிர மணியம் பிள்ளை நாதசுவரம் என்னும் பெருவங்கிய இசைக்கலையில் புகழ் பெற்றவர்.

அறுபது ஆண்டுக்கால இசைக்கலைப் பணியில் திருவையாறு, பழனி இசைப் பள்ளிகளில்சிறப்புப்பேராசிரியராக விளங்கியவர். இசைக்கல்லூரிகளில் பெருவங்கியம், தவில் வகுப்புகள் அமைய முனைந்து வெற்றி கண்டவர். கீழை நாடு களிலும் இலங்கையிலும் இவர்தம் இசைநிகழ்ச்சிகள் பெரும்புகழை ஆக்கித் தந்தன.

இலக்கிய முதுமுனைவராகப்புகழுடம்பில் விளங்கும் சேவியர் தனிநாயக அடிகள் இலங்கை ஈன்ற

தமிழறிஞர். உரோமாபுரியில் கிறித்துவ சமயக் கல்வி கற்றுத் திருச்சபை மறைத் திருவாளராக விளங்கியவர். தமிழில் "ஒப்பியல்-கல்வி முறை" பற்றி ஆய்ந்து முனைவர் பட்டம்பெற்றவர். மேலை மொழிகள் பல கற்றவர். உலகத்தமிழாராய்ச்சிக் கழகத்தையும் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தையும் நிறுவிச் சென்னையில் உலகத்தமிழ்ஆராய்ச்சிநிறுவனம் அமைவதற்கு அடிகோலியவர். கோலாலம்பூரில் முதல் உலகத்தமிழ் மாநாட்டை நடத்திய பெருமை இவருக்குண்டு.

"நூலோதி" தக்கசொல்

'பிபிளியோகிராபி' என்ற ஆங்கிலத் தொடரை 'நூலோதி' என்று பயன் படுத்திவருகிறீர்கள். நூல் மட்டு மல்லாமல் கட்டுரைகளும் இதில் தொகுக்கப்படுகின்றன. எனவே எழுத் தோதி என்றிட்டால் பொருத்தமாக இருக்கும்.

—'தக்க சொல் தேடுவோன்'

இந்த எழுத்து சிந்திக்கத்தக்கது. 'பிபிளியோ என்ற சொல் நூலைச்சுட்டும். நூல் நிலையத்தை ஐரோப்பிய மொழிகளிற் சில 'பிபிளியோதீக்கே' என்று கூறுவதும் இன்றும் உண்டு. நூல் நிலையத்தில் நூல்களும் கட்டுரைகளும் ஏடுகளும் அருஞ்சுவடிகளும் தொகுத்துள்ளனர். பெரும்பான்மை கருதி 'நூலோதி என்ற சொற்றொடரைப் பயன்படுத்தலாம். 'எழுத் தோதி' என்றால் அகரம் முதலிய எழுத்துக்களைப் பற்றிய ஓதி என்றும் பொருள்படும். எனவே, 'நூலோதி' என்ற குறியீட்டைக் கையாள்வது தவறில் லையல்லவா?

சொல்லாட்சியுண்டு: "ஓதினானை ஓதி" என்று மயிலைநாதரும் (நன்னூல்-பதவியல்-138 உரை) நச்சினார்க்கினியரும் (தொல்-எச்சவியல்-463உரை) கூறுகிறார்கள்.

முன்னர், 'நூற்பட்டிகை' என்ற தொடரும் சிலரால் கையாளப்பட்டது இங்கு நினைக்கத்தக்கது.

தமிழ்ப் பல்கலைக் கழகச்

செய்தி மலர்

திங்களிதழ்

பதிவெண் 15033/82X?

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 001.
தமிழ்நாடு - இந்தியா.

இ.அ.அ. மட்டும்.

திருமதி புலவர் திலகம்
5/1709, பிச்சாண்டி முதலி சந்து
மானோசியப்பா வீதி
தஞ்சாவூர்.

மாமன்னன் இராசராசன்
படைப்பிலக்கிய உலகப்பரிசு
கவியோகி சுத்தானந்த பாரதியாருக்கு
வழங்கப்பட்டது.

மாமன்னன் இராசராசன் பெயரில் மிகச்சிறந்த இலக்கியப்படைப்பை ஆக்கும் ஆசிரியர்க்கு ஓர் இலட்சத்து ஓர் ரூபா பரிசை வழங்கத் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிருமிதம் செய்துள்ளது. இப்பரிசு ஆண்டுதோறும் வழங்கப்படும்.

இவ் வடிப்படையில் 1983-84ஆம் ஆண்டிற்குரிய படைப்பிலக்கியமாக, கவியோகி சுத்தானந்த பாரதியார் எழுதிய "பாரதசக்தி மகாகாவியத்" திற்கு வழங்கப்பட்டது. தமிழ்ப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் பல்கலைக்கழகஇணைவேந்தர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கள் பரிசை வழங்கினார்கள்.

பரிசு நூல் தேர்விற்காக அமைககப்பட்ட இந்தியத்தேர்வுக்குழு, தென்னாசியத் தேர்வுக்குழு ஆகிய குழுக்கள் வந்த நூல்களில் நான்கு நூல் களைத் தேர்வு செய்தன. தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் வ.அய்.சுப்பிர மணியம் அவர்கள் முன்னிலையில் கூடிய பதின்மரைக் கொண்ட தேர்வுக்குழு கவியோகி சுத்தானந்தர் படைத்த 'பாரத சக்தி மகா காவியம்' என்னும் படைப்பிலக்கியத்தைப் பரிசுக்குரியதாகத்தேர்ந்தது.

இக்காவியம் 1948இல் முதன்முதலில் வெளியிடப் பட்டு, தமிழ்க் காப்பியங்களான சிலப்பதிகாரம் மணிமேகலை, கம்பராமாயணம் போன்ற படைப்பு களின் வரிசையில் இருபதாம்நூற்றாண்டின் புதுமைக் காப்பியமாகத் திகழ்கின்றது.

பட்டம்-பரிசு பாராட்டு விழா

முதுமுனைவர் பட்டம் பெற்றோர்க்கும், படைப்பிலக்கியப் பரிசு பெற்ற கவியோகி யார்க்கும் பட்டமளிப்பு விழாவன்று மாலை 2-30 மணியில் தஞ்சை **சங்கீத** மகாலில் தமிழ்ப் பல்கலைக் கழகம் பாராட்டு விழா நிகழ்த்தியது.

துணைவேந்தர் முனைவர் வ.அய்.சுப்பிர மணியம்அவர்கள் வரவேற்புரையாற்றினார்கள்

மேலவைத்தலைவர் மாண்புமிகு ம.பொ. சிவஞானம் அவர்கள் தலைமையேற்றுப்பாராட் டினார்கள்.

முதுமுனைவர்நால்வரும் ஏற்புரை கூறினர். கவியோகியார் கவிதையொன்றைப்படித்தார். பேரா.க.வெள்ளைவாரணனார் நன்றி நவின்றார்கள்.

தமிழ்ப் பல்கலைக் கழகம் பதிப்புத்துறை
வெளியீட்டு நூல்கள்.

* மராட்டியர் செப்பேடுகள் 50
-விலை ரூ.150/-

* கலித்தொகை (நச்சினார்க்கினியர் உரை)
இ.வை. அனந்தராமையர் பதிப்பின்
நிழற்படப்பதிப்பு
-விலை ரூ.150/-

* சங்க இலக்கியக் கட்டுரைகள்-கருத்தரங்கம்
-விலை ரூ. 30/-

* ஆராய்ச்சித் தொகுதி
-மு.இராகவையங்கார் -விலை ரூ.100/-

கல்லூரி, பல்கலைக் கழகப் பேராசிரியர்க்கும், ஆய்வு மாணவர்க்கும் விலையில் 40% கழிவு உண்டு.

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை.
அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக அச்சகம், தஞ்சாவூர்-613 001.